1968 மார்ச் 16]

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி ; கோழியினுடைய கழிவுப் பொருள்களை, சாணம் எல்லாம் விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தில்தான் அவை சேகரிக்கப்படுகின்றன. இந்த உரம் விவசாயத்திற்கு நல்ல பலன் அளிக்கக்கூடியது. கொட்டகையை அடிக்கடி சுத்தம் செய்யும் நிலைமை இருந்து வருகிறது.

Tourist homes in Tirunelveli district

* 233. Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state whether there is any proposal to construct tourist homes in Ovari, Manapad and Alanthalai in Tirunelveli district?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு டி. மார்டின் ; தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே திருச்செந்தூர் தாலுகாவில் மணப்பாடு, ஆலந்தலை என்ற கிராமங்களும், நாங்குனேரி தாலுகாவில் உவரி என்ற கிராமமும் கிறிஸ்தவர்களுடைய புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கின்றன. தமிழகம் எங்குமிருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் இந்த இடங்களுக்கு வரும்படியான நிலைமை இருக்கிறது. பிரயாணிகள் தங்குவதற்கு இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த இடங்களில் பிரயாணிகள் தங்குவதற்காக சுற்றுலா மாளிகை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா? அல்லது தனியார் யாராவது மாளிகை அமைக்க முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நடப்பு ஆண்டில் திருச்செந்தூர், குற்றாலம் ஆகிய இரண்டு இடங்களிலும் சுற்றுலா மாளிகை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டங்கள் முடிவுற்றதும், அடுத்த ஆண்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே புதிதாகச் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி புண்ணிய க்ஷேத்திரத்திற்கு மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதிகள் இல்லை. மேலும் இது கடற்கரையோரமாக இருப்பதால், பிரயாணிகள் தங்குவதற்கும் வசதியில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பிரயாணிகள் விடுதி கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட திருச்செந்தூர், குற்றாலம் திட்டங்கள் முடிவுற்றதும் இது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர்முகம்மது : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பொட்டல்புதூரில் இருக்கும் மொகைதீன் ஆண்டவர் தர்க்காவுக்கு ஜாதி சமய பேதமுற்று எல்லா சமய மக்களும் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதியான இடமில்லை. ஆகவே பொட்டல் புதூரிலே ஒரு சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா? பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு இந்த பிரயாணிகள் விடுதியைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஊரே பொட்டல் புதூர் என்ற பெயராக இருக்கிறது. (சிரிப்பு) ஏற்கெனவே நான் கூறியபடி திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு திட்டங்களும் முடிவுற்ற பிறகு, மற்ற இடங்களில் பிரயாணிகள் விடுதி கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.